**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**
**Date of Publication : 5th & 6th of Every month**

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

| | | |
|---|---|---|
| வேணு : 18 | அக்டோபர் 2012 | கானம் : 3 |




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**


ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

| | | |
|---|---|---|
| வேணு : 18 | அக்டோபர் 2012 | கானம் : 3 |

Delivered by India Post www.indiapost.gov.in

ஆகஸ்டு 31 , 2012 - பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் திருநாங்கூர் ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேதபாடசாலா வித்யார்த்திகளுக்கு பாராட்டு பத்திரம் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்குதல் - சைதன்ய குடீரம் - கோவிந்தபுரம்





செப்டம்பர் 12 - 18 , 2012 -பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம்



ஆகஸ்டு 31 , 2012 -மலேசிய சுதந்திர தின விழாவை முன்னிட்டு மலேசிய நாமத்வார் அன்பர்கள் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு சேவை - அம்பங், மலேசியா




செப்டம்பர் 9, 2012 - 'ஜனாபாய் டிரஸ்ட்' சார்பாக மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபம் சுற்றி ஹரே ராம மஹாமந்திர நகர சங்கீர்த்தனம்




செப்டம்பர் 10, 2012 - மாணவச்செல்வங்களிடையே "உயர்பண்புகளை வளர்த்துக்கொள்ளல்" நிகழ்ச்சி- தாம்பரம் வள்ளுவர் குருகுலம் - ராமானுஜம்ஜி



ஆகஸ்டு 29, 2012 - மாணவச்செல்வங்களிடையே மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை - உடுமலைப்பேட்டை - ராமானுஜம்ஜி



செப்டம்பர் 3-9, 2012 - [illegible]பட்டியில் பாகவத சப்தாஹம், நகரசங்கீர்த்தனம் - ஸ்ரீவல்லபதாஸ்





செப்டம்பர் 7, 2012 - 'GOD INDIA TRUST' சார்பாக தூத்துக்குடி நாமத்வாரில் புராநவா புதிர் போட்டி - ராமானுஜம்ஜி மற்றும் தூத்துக்குடி அன்பர்கள்

செப்டம்பர் 22, 2012 - 'GOD INDIA TRUST' சார்பாக பெங்களூர் பாரதீய வித்யா பவனில் புராநவா புதிர் போட்டி - ராமானுஜம்ஜி, ஸ்ரீபாலாஜி மற்றும் பெங்களூர் அன்பர்கள்






'Happiness at Work' Session at Trichur Management Association - by Ramanujamji - Sep 6, 2012

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:18 அக்டோபர் 2012 கானம்:3

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**ந காஷ்டே வித்யதே தேவோ**
**ந ஸிலாயாம் ந ம்ருத்ஸு ச**
**பாவே ஹி வஸதே தேவ:**
**தஸ்மாத்பாவோ ஹி காரணம்**

"மரத்தினால் செய்யப்பட்ட உருவத்திலும், கற்சிலையிலும், மண்ணால் செய்யப்பட்ட பிரதிமையிலும், தெய்வம், நம்முடைய **பா**வத்தினால் (பாவனையினால்) அல்லவோ இருக்கிறது! ஆதலால், தெய்வத்தை நம் முன் காட்டுவதற்கும், அதன் அருளை பெறுவதற்கும் பாவனையே அடிப்படை ஆகும்"

**– கருடபுராணத்தில் பகவான்**

(கருட புரா – உத்தர கண்டம் – 28.11)

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் – 199 | 3 |
| மதுர யாத்திரை | 8 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம் – 31 | 13 |
| ஸ்ரீசுதர்சன சதகம் | 17 |
| ஆலய தரிசனம் | 29 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| ப்ருந்தாவன கண்ணன் | 38 |
| மாலே மணிவண்ணா | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின்
# கீர்த்தனம்

ராகம் : ஸரஸ்வதி      தாளம் : ஆதி

பல்லவி

இன்று போல் என்றும் எனை நீ காத்திடல் வேண்டும்
ப்ரேமிகவரதா! ப்ரேமிகவரதா!!

(இன்று போல் ...)

அனுபல்லவி

வந்தனம் வந்தனம் மீண்டும் மீண்டும் வந்தனம்
வந்தனம் செய்வதன்றி வேறொன்றுமறியேன்

(இன்று போல் ...)

சரணம்

ஆனைக்கன்று அருள் செய்த கண்ணா!
த்ரௌபதி மானம் காத்த உத்தமனே!
தூணைப் பிளந்து வந்து பாலகனை காத்தாய்!
பேதை எனை காப்பதும் நின் கடனே! (இன்று போல் ...)

முன் அட்டை – மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி; பின் அட்டை – மதுரபுரி ஆஸ்ரமத்தில் சுதந்திர தின கொடியேற்றம், ஆகஸ்டு 15, 2012



# மதுரமான மஹனீயர் - 199

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

நம் சத்சங்கத்தை சேர்ந்த திரு.தோத்தாத்திரி நாங்குநேரியை சேர்ந்தவர். இவர் ப்ரேமிகபவன ஸ்ரீனிவாச பெருமாள் சன்னிதியில் "திருமாலை" பாசுரம் அன்றாடம் சேவிப்பார். புதுக்கோட்டையில் இவரது தந்தை டி.வி.எஸ். கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். புதுக்கோட்டையில் தோத்தாத்திரி டிப்ளமோ வரை படித்தார். சென்னையில் இரு வருடங்கள் வேலை பார்த்த பின், பாண்டிச்சேரியில் ஒரு கம்பெனியில் மின்னணுத்துறையில் வேலைக்கு சேர்ந்தார். அங்குதான் நம் சத்சங்கத்தை சேர்ந்த ராமானுஜம்ஜியும் வேலை பார்த்து வந்திருந்ததால், அவருடன் நல்ல நட்பு ஏற்பட்டது. அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று மஹாமந்திர கீர்த்தனம் செய்வதும், ஸ்ரீஸ்வாமிஜியின் உபதேசமொழிகள் குறித்து பேசுவதும் வழக்கமாய் இருந்தது. இரு வருடங்கள் கழித்து சென்னைக்கு வந்து விட்ட ராமுஜியை பார்க்க வந்தபொழுதுதான் ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசித்தார் தோத்தாத்திரி. ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகவும் ஈடுபட்டு "சென்னைக்கு வர ஆசை" என்று முதல் தரிசனத்தின்பொழுதே வேண்டிக்கொண்டார். உடனே ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "நீ தாராளமாக சென்னைக்கு வரலாம்" என்று சொல்லி ஒரு மாம்பழமும் பிரசாதமாய் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். அதிலிருந்து அடிக்கடி சென்னை வருவதும், வாராவாரம் நடக்கும் மஹாமந்திர கீர்த்தனங்களில் கலந்து கொள்வதுமாக தோத்தாத்திரி இருந்தார்.

வேலையில் முன்னேறுவதற்காக, பி.ஈ. படிக்க வேண்டும் என்று தோத்தாத்திரி ஆசைப்பட்டிருந்தார். அதற்காக பல முயற்சிகள் செய்தும் வந்தார். ஆனால் அவரால் நுழைவு தேர்வில் வெற்றி பெற முடியவில்லை. இதை எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜியிடம் அவர் தெரிவிக்கவில்லை. ஆனால் ஸ்ரீஸ்வாமிஜியே, ஒருநாள்

தோத்தாத்திரியை கூப்பிட்டு, சத்சங்க அன்பர் ஆவடி திரு.சிவகுமார் மூலமாக ஒரு கோச்சிங் சென்டரில் படிக்க சொன்னார். சென்னையில் நிரந்தர வேலை இருந்தால்தான் சென்னையில் படிக்க முடியும். அப்பொழுது சென்னையில் வேலை கிடைப்பது சுலபமாக இல்லை. ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஒருநாள் இது குறித்து பிரார்த்தித்தார். ஸ்ரீஸ்வாமிஜி, தோத்தாத்திரியை ப்ரேமிகபவன பெருமாள் சன்னிதியில் தொடர்ந்து விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணம் செய்ய சொன்னார்கள். அதன்படி செய்தபின், சென்னையில் நல்ல வேலையும், ஸ்ரீஸ்வாமிஜியை அடிக்கடி தரிசனம் செய்ய ஹேதுவாக, அருகில் ஜாகையும் அமைந்தது.

பகுதி நேர பி.ஈ. நுழைவு தேர்வில் ஓபன் கோட்டா 17 சீட்தான். சரியாக, தோத்தாத்திரி 17ஆவதாக செலக்ட் ஆனார்! ஆனால், அவரது உத்தியோக சான்றிதழில், அவர் புரோபேஷனில் இருப்பதாக (திறன் அறியும் காலத்தில்) போட்டு இருந்தது. அதனால், சீட் கிடைக்காமல் போனது. இது அவருக்கு பெருத்த ஏமாற்றமானது. கஷ்டப்பட்டும், நமக்கு சீட் கிடைக்கவில்லையே என, மனம் உடைந்து போனார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அந்த சமயத்தில், அவருக்கு பலவிதமாக ஆறுதல் அளித்தார்கள். பி.ஈ. சீட் கிடைக்க மேலும் வழி உண்டா என தெரிந்து கொள்ள, பல்கலைக்கழக நிர்வாகிகள் பலரை சந்தித்தார் தோத்தாத்திரி. அதில் ஒருவர் கிறிஸ்துவர். அவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. "கடவுள் இந்த சீட்டை உனக்கு அடுத்த முறை தர ஆசைப்படுகிறார்" (God wishes you get this seat next time) என்று சொன்னார். குருநாதர் யார் மூலமாக வேண்டுமானாலும் பேசலாமே! தோத்தாத்திரிக்கு அது ஆறுதலாக இருந்தது. அதை ஸ்ரீஸ்வாமிஜியிடம் வந்து அப்படியே சொல்ல, அவரும் அதை ஆமோதிப்பது போல், "சரி, அடுத்த வருடம் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டார். குருநாதர்தான், அந்த கிறிஸ்தவ அன்பர் மூலம் பேசி இருக்கிறார் என்று, மறுவருடம் நன்றாக புரிந்தது. மறு வருட நுழைவு தேர்விலும் அதே 17வது சீட் கிடைத்தது! கல்லூரிக்கு செல்கையில் எல்லாம் "ஒரு வருடம் கழிந்து விட்டதே" என்று தோத்தாத்திரிக்கு தோன்றிக்கொண்டே இருக்கும். ஆனால் பாருங்கள்! படிப்பு முடிய ஒரு வருடம் மீதம்

இருக்க, பி.ஈ. படித்தவர்களுக்கே வேலை தரும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை அவருக்கு சுலபமாக கிடைத்தது. படிக்க சேருவதில் தடை ஏற்பட்டு, தாமதமானது; ஆனால், குருவருள், வேலை கிடைப்பதற்கான தடையை உடைத்து விட்டது!

ஒருமுறை நாங்குநேரிக்கு அருகில், ஒரு கோவில் விழாவில் கலந்து கொள்ள ஸ்ரீஸ்வாமிஜி சென்றிருந்தார்கள். அங்குள்ள ஒரு பெருமாள் கோவிலில் மரத்தால் ஆன ஒரு ரங்கநாதர் இருக்கிறார். அக்கோவிலில் கைங்கரியம் செய்து வரும் திரு.ரங்கனையும் ஸ்ரீஸ்வாமிஜிக்கு தெரியும். ஆனால் இது தோத்தாத்திரிக்கு தெரியாது. ஸ்ரீஸ்வாமிஜி நாங்குநேரிக்கு வந்தவுடன், தன்னுடன் வந்த அன்பரிடம், "நீ போய் தோத்தாத்திரியை அழைத்து வா. அவன் திரு.ரங்கனுடன்தான் வருவான் பார்" என்றார். ஸ்ரீஸ்வாமிஜி சொன்னது போலவே திரு.ரங்கனை அழைத்து கொண்டுதான், தோத்தாத்திரியும் ஸ்ரீஸ்வாமிஜியை பார்க்க வந்தார். ரங்கன் தமது பிள்ளையை நமது வேதபாடசாலையில் சேர்க்க ஆசைப்பட்டார். ஸ்ரீஸ்வாமிஜி தம் கைப்பட அவருக்கு முகவரி எழுதி கொடுத்தார்கள். மதுரபுரி பாடசாலையில் அத்யயனம் செய்த அவர்தான், இன்று நாங்கூர் பாடசாலையில் உபவேதம் சொல்லி கொடுக்கும் ஹரேகிருஷ்ணா ஆவார். அன்றைய தினம், செய்தித்தாளை வாங்கி வருமாறு குருநாதர் சொல்லி கொண்டே இருந்தார்கள். அப்பொழுதெல்லாம் பெரிய தகவல் தொடர்பு வசதி எல்லாம் இல்லை. பேப்பரில் கோயம்புத்தூரில் பெரிய குண்டு வெடிப்பு என்று இருந்தது. அதனால் விழா எளிமையாக சீக்கிரம் நடந்து முடிந்தது.

ஸ்ரீஸ்வாமிஜி தன்னிடம் வருபவர்களுக்கு ஆன்மீக உபதேசம் அருளுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தேவைகளை பெற்றோர் கவனித்து கொள்வது போல் கவனித்து கொள்வார். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். தோத்தாத்திரி விஷயத்திலும் அப்படித்தான் இருந்தது. குருநாதரின் ஆசிகளால் தோத்தாத்திரிக்கு நல்ல இடத்தில் திருமணம் நடைபெற்றது. அவரது குழந்தைகளுக்கு, ராமகிருஷ்ணன் மற்றும் பர்ஷானாராணி என்ற பெயர்களை குருநாதரே சூட்டுவித்தார்.

தோத்தாத்திரி குடும்பத்தினர் அவரை குரோம்பேட்டையில் ஜாகை வைக்க ஆசைப்பட்டார்கள். அது நல்ல இடம்தான். ஆனால், "பாண்டிச்சேரியை விட்டு சென்னை வந்தாயிற்று. சென்னையில் ப்ரேமிகபவனத்தின் அருகில் ஒரு வீடு இருந்தால் நன்றாக இருக்குமே" என்று அவருக்கு தோன்றியது. இறுதியில் குருவருளால் அவர் விருப்பப்படியே அருமையான வீடு அசோக் நகரிலேயே அமைந்தது. அவர் சகோதரியும், அதே அபார்ட்மெண்டில் ஒரு வீடு வாங்கி குடியேறினார். அது மட்டுமில்லை; ஆலப்பாக்கம் மதுரமுரளி பவனத்திற்கு அருகிலும், அவருக்கு ஒரு வீடு அமைந்தது.

தோத்தாத்திரிக்கு ஒருமுறை, ஒரு பெரிய கம்பெனியில் இன்டர்வியூ வந்தது. அது டெலிபோனில் நடந்தது. இன்டர்வியூ நன்றாக செய்யவேண்டும் என்பதற்காக, ஸ்ரீஸ்வாமிஜி திருவுருவ படத்திற்கு முன்பு அமர்ந்து, தோத்தாத்திரி பேசினார். அது அவரது வழக்கம்தான். அந்த குறிப்பிட்ட வேலையும் கிடைத்து விட்டது. வேலை பெங்களூரில் என்றார்கள். ஸ்ரீஸ்வாமிஜி சென்னையில் இருக்க, பெங்களூருக்கு செல்ல தோத்தாத்திரிக்கு இஷ்டமில்லை. தமது ஆசையை ஸ்ரீஸ்வாமிஜியிடம் விண்ணப்பித்தார். இரு நாட்களில் அந்நிறுவனத்தின் பெரிய அதிகாரி ஒருவர், ஐரோப்பாவில் இருந்தே தொடர்பு கொண்டு, சென்னை அருகே, ஸ்ரீபெரும்புதூரிலேயே எங்கள் கூட்டு நிறுவனத்தில் எங்கள் பிரதிநிதியாக, வேலையில் சேருங்கள் என்றார். சந்தோஷமாய், புது வேலையில் சேர்ந்தார் தோத்தாத்திரி.

சென்ற இடத்தில் வேலை பார்க்கும் இடம் அவரை தவிர மற்றவர்களுக்கு நன்கு அமைந்திருந்தது. அவருக்கு மட்டும் அது சரியாக இல்லை. இதை மனவருத்தமுடன், ஒரு சக ஊழியரிடம் தோத்தாத்திரி “this poor boy sits here only” என்று சொல்லி வருத்தப்பட்டார். அந்த சக ஊழியரும், உடனே நல்ல இடம் அமைத்து கொடுத்தார். இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட குருநாதர், அப்பொழுதிலிருந்து "நீ என்ன poor boyஆ" என்று தோத்தாத்திரியை கேட்டவாறே இருப்பார்கள். அவரை தொழில் நிர்வாகம் சம்பந்தமாக, மேல்படிப்புகளில் (six sigma – சிக்ஸ் சிக்மா) பயிற்சி பெற ஊக்குவித்தும் வந்தார்கள். அதில் நல்ல

ப்ராஜெக்டும், தாம் வேலை பார்த்த கம்பெனியிலேயே செய்தார் தோத்தாத்திரி. இதனால் மேற்கொண்டு வேலையில் நல்ல மதிப்பும், நல்ல உயர்வும் கிடைத்தது. குருநாதர் தம்மை நீ என்ன poor boyஆ என்று கேட்டு கேட்டே, இன்று தம்மை நல்ல வசதி உள்ளவராக செய்து விட்டார் என்று சொல்கிறார் தோத்தாத்திரி.

"திருமாலுக்கு அடிமை செய்" என்று குருநாதர் தமக்கு உபதேசம் செய்ததாக தோத்தாத்திரி சொல்கிறார். அதையே, தம்மை செய்ய வைத்து விட்டதாகவும் சொல்கிறார்.





**Chaitanya Mahaprabhu Nama Bhiksha Kendra**
- New CD Release - Kirtans of
His Holiness Sri Sri Muralidhara Swamiji
**MadhuraGeetham Volume 11 -**
Rendered by Aswin Kumar
**Contact MADHURAM Bookstall** - 38/22,
Thambaiya road Extn, West Mambalam,
Chennai -033 ( 9AM - 12 PM, 4PM - 8PM).
+914423727400 / +919442613710,
email:publications@namadwaar.org


## Sri Ramanujamji's USA Satsang tour

Sri Ramanujamji will be travelling to the United States of America on a satsang tour from October to December this year. He will be visiting 15 cities during this period and performing satsangs.

The October 2012 Schedule is as follows:

| | |
|---|---|
| **Oct.4-9** | **Atlanta, GA** |
| **Oct. 10-12** | **Richmond, VA** |
| **Oct 13-16** | **New York / New Jersey** |
| **Oct 18-21** | **Boston** |
| **Oct 25-27** | **Bay area, CA** |
| **Nov 2-7** | **Seattle, WA** |

Email: contact@godivinity.org for more detail

# விருத்திம் கர்நாடகே கதா

(9)

–ராமானுஜம்ஜி

28ஆம் தேதியன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பேசியது முழுக்க முழுக்க விநாயகரை பற்றித்தான். ராமசந்திராபுரத்தில் இருந்து நவீன்ஜியின் வீட்டிற்கு கிளம்பி சென்று கொண்டு இருந்தோம். செல்லும் வழியில், மிகவும் அழகான சுத்தமான ஒரு கோவிலை பார்த்தோம். வெளியில் கோபுரம் மிக அற்புதமான வண்ணப்பூச்சுடன் அமைந்திருந்தது. கோபுரத்தின் உட்புறமோ எல்லாம் தகதகக்கும் கண்ணாடியால் வேயப்பட்டு இருந்தது. கோபுரத்தை தாண்டி, உள்ளே சென்றவுடனே ஒரு அழகான பழங்கால கணபதி கோவிலுக்குள் நுழைந்திருக்கிறோம் என்று புரிந்தது. கோவில் அர்ச்சகர்கள் எங்களை இன்முகமுடன் வரவேற்க ஸ்ரீஸ்வாமிஜி தரிசனம் செய்து கொண்டார்கள். கிளம்புகையில் கோவிலில் தினமும் கணபதி ஹோமம் நடக்கிறது என்று அர்ச்சகர் தெரிவித்து, அது சம்பந்தமான ஒரு நோட்டீசையும் கொடுத்தார். உடனே, ஸ்ரீஸ்வாமிஜி அன்றைய ஹோமத்திற்கான செலவை செலுத்துமாறு எங்களுக்கு உத்திரவிட்டார். அப்படியே செய்தோம். கோவிலிலேயே பிரசாதமும் எடுத்து கொள்ளலாம் என்றார்கள்.

நவீன்ஜியின் வீட்டில் மதியம் உணவு முடித்து, மாலை எங்கு செல்லலாம் என்று, ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஆவலுடன் கேட்டோம். அவரோ, அங்கு அருகிலுள்ள முக்கிய தலங்கள் பற்றி விவரம் சேகரிக்க சொன்னார். வலைதளத்தில் தேடினோம். சட்டென ஸ்வாமிஜியே அம்புதீர்த்தம் போகலாம் என்று முடிவு செய்தார்கள். எங்களுக்கு அவருடன் எங்காவது செல்ல வேண்டும் என்பதுதானே இலக்கு! சந்தோஷமாய் தலையை ஆட்டினோம். எங்கள் ஒரே பிரார்த்தனை, அந்த அம்புதீர்த்தம் வெகு தொலைவில் இருக்க வேண்டும்; அவ்வளவுதான். அப்பொழுதுதானே பிரயாணம் நீண்டதாக இருக்கும். அம்பு தீர்த்தமும் வந்து சேர்ந்தது.

இந்த இடம், ராமாயணத்துடன் சம்பந்தப்பட்ட இடம். மாலையில் மரங்களடர்ந்த அவ்விடத்தில், ஒரு பெரிய ஏரியையும் அதை ஒட்டி ஒரு கோவிலின் அமைப்பையும் பார்க்க முடிந்தது. அந்த இளம் மாலையில், அவ்விடத்தில் ஒரு புனிதம் நிலவுவதை உடனுக்குடன் உணர முடிந்தது. இடத்தின் அழகும் பிரமாதம். இயற்கை அன்னையின் அழகை, எதனுடன், எப்படி ஒப்பிட்டு வர்ணிப்பது?

சாலையில் இருந்து சில அடிகள் கீழே ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அவ்விடத்திற்கு ஒரு கற்சாலை இட்டு செல்கிறது. கணபதியும் தேவியும் இருக்கும் அக்கோவிலில் ஒரு அழகான சிவன் குடி கொண்டு இருக்கிறார். தந்தையும் மகனுமாக தெய்வங்கள் கோவில் கொண்டிருக்கும் அங்கு இரு அர்ச்சகர்கள் தந்தையும் மகனுமாக இருந்தனர். இருவரும் எங்களை புன்முறுவலுடன் வரவேற்றனர். இங்குதான் ஷாராவதி நதி பிறப்பெடுக்கிறது. முன்னரே, இந்த நதியின் ஓட்டத்தை பயணத்தினூடே அப்போதைக்கு அப்போது பார்த்து இருந்தோம். ஷாராவதி நதி உற்பத்தி ஆகுமிடத்திற்கு சற்றே மேலாக, அந்த சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜி சன்னிதியை வலம் வந்தார். ஒரு சிறு வழியினூடே ஓடும் அந்த நீர்பெருக்குதான் 132கி.மீ தூரம் ஷாராவதி நதியாக ஓடி அரபிக்கடலில் கலக்கிறது என்பதை பார்க்க ஆச்சரியமாக இருந்தது. நடுவில் இதுவேதான் ஜாக் நீர்வீழ்ச்சியாக இருக்கிறது! தமிழில் இதைத்தான், நதி மூலம் ரிஷி மூலம் பார்க்காதே என்கிறார்கள். பார்த்தால் புரிந்து கொள்ள முடியாது.

ஷாராவதி ஊற்றெடுத்து கொப்பளித்து ஓடி, அருகில் உள்ள குளத்தில் கலப்பதை நன்கு பார்க்க முடிகிறது. அது நன்கு தெரியும் வண்ணம் கோவிலை கட்டி இருக்கிறார்கள். கோவிலின் முக்கியத்துவத்தை அர்ச்சகர்கள் எடுத்து சொன்னார்கள். ராமர் ராவணனை வீழ்த்தி விட்டு திரும்புகையில், சீதைக்கு தண்ணீர் தாகம் எடுத்தது. ராமர் ஒரு அம்பு எடுத்து இவ்விடத்தில் அடிக்க உடனே நீர் பெருக்கெடுத்து வந்தது. அதுவே ஒரு நதியாக உருவாகியது. ஆரம்பத்தில் சீதையின் தாகம் தணித்த ராமரின் அம்பு தீர்த்தம்தான் இந்த ஷாராவதி ஆறு! அது இன்றளவும்

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு பயன்பட்டு வருகிறது.

தரிசனம் முடித்து ஸ்ரீஸ்வாமிஜி கிளம்புவதற்கு சித்தமாய் இருந்தார். உடனே அந்த பெரிய அர்ச்சகர் ஓடி வந்து, "கோவிலில் எல்லாம் சரியாக இருக்கிறதா?" என்று கேட்டார். தம்மை ஒரு சாதாரண பக்தர் போலத்தான் ஸ்ரீஸ்வாமிஜி காட்டி கொண்டு இருந்தார்கள். நாங்களும் ஒன்றும் சொல்லவில்லை. அர்ச்சகர் தானாகவே வந்து கேட்டதில் இருந்தே ஏதோ தெய்வ சங்கல்பம்தான் வேலை செய்கிறது என்று புரிந்தது.

அர்ச்சகர் பேசியவுடன், கிளம்பிய ஸ்ரீஸ்வாமிஜி உடனே தாமதித்து, நவீன்ஜியை மேலே என்ன விஷயம் என்று விசாரிக்க சொன்னார். அப்பொழுதுதான் ப்ராசீனமான கணபதி சிலை ஒன்று மூலையில் மண்ணில் கிடப்பதையும், அந்த கணபதி இருந்த இடத்தில் ஒரு புதிய சிலை வைக்கப்பட்டு இருப்பதையும் கண்டோம். இப்படி யாரோ சிலர் மாற்றி வைத்து இருப்பதாகவும் அறிந்தோம். ஸ்ரீஸ்வாமிஜி, அந்த ப்ராசீன வினாயகரை மிகவும் பக்தியுடனும் அன்புடனும் பார்த்தார். அவரை அழகாக தூக்கி வைத்தோம். எங்களை பார்த்து அபிஷேகத்திற்கு தேவையான பொருட்களை உடனே வாங்கி வருமாறு பணித்தார். அது ஒரு மலை உச்சி. நாங்கள் சில மைல்கள் காரை ஓட்டி சென்று இளநீர், பால் மற்றவைகளை வாங்கி வந்தோம். ஸ்ரீஸ்வாமிஜி கேட்ட பொருட்கள் அனைத்தும் ஓரிடத்தில் கிடைத்து விட்டது.

திரும்பி வந்து பார்த்தால், இளம் அர்ச்சகருக்கு ஸ்ரீஸ்வாமிஜி மூல மந்திர உபதேசம் தருவதையும் அந்த அர்ச்சகர் நன்றி பெருக்குடன் அதை பணிவுடன் பெற்றுக்கொண்டு இருப்பதையும் பார்த்தோம். அதற்குள்ளாக குளத்தினருகே அந்த ப்ராசீன வினாயகரை ஸ்ரீஸ்வாமிஜி கொண்டு வைத்தும் இருந்தார்கள். அவர் அபிஷேகம் செய்ய செய்ய நவீன்ஜி அழகாய் சாமவேதம் சொன்னார். ராம பாண தீர்த்தம் கொண்டு கணபதிக்கு அந்த மாலை வேலையில் ஸ்ரீஸ்வாமிஜி செய்த அபிஷேகம் இன்றும் எங்கள் கண் முன் நிற்கிறது. தேவிக்கும் கணபதிக்கும் பூஜை செய்து விட்டு, மேற்கொண்டு எப்படி பூஜை செய்ய வேண்டும் என்றும் ஸ்ரீஸ்வாமிஜி அந்த அர்ச்சகருக்கு தெரிவித்தார்கள்.

(மதுர யாத்திரை தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஒரு மனிதர் தனது குடும்பத்துடன் நெருங்கிய பாசம் கொண்டவர். தன் குடும்ப நலத்திற்காக, அவர் அதிகம் கவலைப்பட வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்டவர் தன் கவலைகளை மறந்து நிம்மதியாக இருக்க வழி இருக்கிறதா? அவர் எப்படி தன்னை கடவுளுடன் பிணைத்து கொள்ள முடியும்?

பதில்: ஒரு பேருந்தில் பயணிக்கையில், நீங்கள் அமைதியாக அமர்ந்து இருக்கிறீர்கள். பேருந்து நன்கு ஓட வேண்டுமே என்று நீங்களும், ஓட்டுனரும் கவலைப்படலாம். ஆனால், அத்தகைய கவலை, ஓடும் பேருந்திற்கு இல்லை. அதுபோலவே இந்த உடம்பு பகவான் கிருஷ்ணன் கையில் இருக்கும் ஒரு கருவி மட்டுமே என்றும், அவனே அதை இயக்குகிறான் என்றும் நினைத்து வரவும். இதை அடிக்கடி மனதில் நன்கு பதித்துக்கொள்ளவும். பகவான் கிருஷ்ணன் வாழ்க்கையை நடத்துகிறான் என்று நன்கு தோன்ற ஆரம்பித்து விட்டால், கவலைகள் பற்றாது. சுருங்க சொன்னால் கவலை வரின், அதை கிருஷ்ணன் பார்த்து கொள்வான் என்று இருக்க பழகுபவனை, கவலைகள் துன்புறுத்த மாட்டா. பெரிய கம்பெனியில் வேலை பார்ப்பவனும், வசதியான குடும்பத்தில் பிறந்தவனும் கவலைப்படுவதில்லை. அதுபோலவே ஸ்ரீகிருஷ்ணனிடம் சரணடைந்தவர்களுக்கும் கவலை விட்டு போய் விடும். ஏனெனில் அவனிடம் இல்லாதது வேறு எங்கு இருக்கிறது?


கேள்வி: மனித உடலில் இருக்கும் ஜீவனுக்கும், பிற ஜீவராசிகளில் இருக்கும் உயிருக்கும் வேறுபாடுகள் என்னென்ன?

பதில்: ஒரு வித்தியாசமும் இல்லை. இருப்பதெல்லாம் ஒரே

மெய்யுணர்வான கிருஷ்ணனே. அந்த உணர்வை நீங்கள் உங்கள் மனதின் மூலம் உருவகப்படுத்தி பார்த்தால் அது புரியாது. ஒரு மாலையில் பல விதமான மணிகள் கோர்க்கப்பட்டு இருக்கிறது. எல்லா மணிகளையும் சேர்த்து இணைப்பது ஒரே கயிறுதான். மணிகள் வேறு; ஆனால் கயிறு ஒன்றுதானே. அப்படித்தான் ஜீவன்கள் வேறு; ஆத்மாவான கிருஷ்ணன் ஒன்றுதான்.

கேள்வி: ஆன்மீக சாதனைகளை பயில்கையில் திடீரென எண்ணங்கள் தடம்புரள்கின்றன. நாம் செய்வது சரிதானா என்று கேள்வி எழுகிறது. எனது இந்த கஷ்டத்திலிருந்து விடுபட வழி சொல்லுங்கள்.

பதில்: கவலைப்பட வேண்டாம். சாதனைகளை ஆரம்பத்தில் பயில்கையில், இப்படி தோன்றுவது சகஜம். காலப்போக்கில் இவை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, முடிவில் எல்லாம் சரியாகி விடும்.





# பாகவத பழம்

**பாகம் 2 – அத் 15**

–ஸ்ரீஸ்வாமிஜி (31)

தர்மபுத்ரரின் கேள்விக்கணைகளால் கலங்கிய அர்ஜுனன், அழவும் ஆரம்பித்தான். அர்ஜுனன், தர்மபுத்திரரை பார்த்து, "அண்ணா, அந்த பகவானால் நாம் அடைந்த நன்மைகள் ஒன்றா? இரண்டா? நாம் அடைந்த அத்தனை நன்மைகளுக்கும் அவன் ஒருவனே காரணம் அல்லவா! அன்றைக்கு துருபத மஹாராஜா சபையில் நடந்த ஸ்வயம்வரத்தில், மிக பெரிய அரசர்கள் எல்லாம் வீற்றிருக்க மீனை அடித்து நாம் திரௌபதியை மனைவியாக அடைந்ததற்கு அவனே காரணம் அல்லவா! ராஜ ஸூய யாகம் நாம் செய்தபொழுது, எல்லா நாட்டு அரசர்களும் நமக்கு கப்பம் கட்டியதற்கும் அவனே காரணம் அல்லவா!

ஜராசந்தனை யாரால் வெல்லமுடியும்? பீமனுக்கு யுக்தியை சொல்லிக் கொடுத்து, அவனை பீமன் வதம் செய்ததற்கும் ஸ்ரீகிருஷ்ணனே காரணம் அல்லவா! மகாபைரவ யாகத்தில் கொண்டுவரப்பட்ட அரசர்கள் விடுவிக்கப்பட்டதற்கும், அவனே காரணம் அல்லவா! அன்று திரௌபதியை கௌரவர்கள், அதிலும் துரியோதனன், எப்படி அவமானப்படுத்தினான்! அப்பொழுது அந்த துரியோதனனையும், துச்சாதனனையும் பழிவாங்கியே தீருவேன் என்று சபதமெடுத்தான் பீமன். அப்படி சபதம் செய்த பீமன் தன்னுடைய சபதத்தை நிறைவேற்றியது கிருஷ்ணனின் அருளால் அன்றோ! வனவாஸத்தில் நாம் இருக்கும்பொழுது துர்வாஸரை அவருடைய பட்டாளத்துடன் துரியோதனன் அனுப்பி வைத்தான். அந்த துர்வாஸரிடமிருந்து நமக்கு எந்த சாபமும் வராமல் காப்பாற்றியது கிருஷ்ணன் அன்றோ!

எனக்கு பாசுபதாஸ்திரத்தை பரமேஸ்வரனிடமிருந்து வாங்கித் தந்ததும் அவனுடைய கிருபை அல்லவோ! அதேபோல் இந்திரனிடமிருந்து எனக்கு ஆஸனத்தை பெற்றுத் தந்ததும்

கிருஷ்ணனுடைய கிருபை அல்லவோ! இந்திரன் மற்றும் எல்லா தேவர்களும், என்னுடைய பாதுகாப்பில் கவலையில்லாமல் இருந்தார்கள். அதற்கும் அவன் அருள் அன்றோ காரணம்! அப்பேர்ப்பட்ட பிரபு, எனக்கு சாரதியாக வந்து அமர்ந்துகொண்டதை நான் என்னவென்று சொல்வேன். கர்ணன், துரோணர், பீஷ்மர் போன்ற எதிரிகளின் பராக்கிரமம் என் முன்னால் எடுபடாமல் போனதற்கு அவனின் கிருபையே காரணமன்றோ! என்னை அவன் சில சமயங்களில் 'ஹே பார்த்தா' என்று பாசத்துடன் அழைப்பான். சில சமயம் அழகாக "அர்ஜுனா" என்றழைப்பான். நம்முடைய வம்சத்திற்கே பெருமை சேர்ப்பதுபோல், சில சமயங்களில் "குரு சிரேஷ்ட" என்று இனிமையாக அழைப்பானே!

அவைகள் எல்லாம் இப்பொழுது என் நினைவிற்கு வந்து என் நெஞ்சைப் பிளக்கின்றது என்று கூறி அழுதான்.

"நான் வேறு எங்காவது படுத்துக் கொண்டிருந்தால் கூட என்னை அழைத்து அவன் பக்கத்தில் படுக்க வைத்துக் கொள்வான். அல்லது நான் எங்கு படுத்துக் கொண்டிருக்கிறேன் என்று என்னைத் தேடிவந்து என் பக்கத்தில் படுத்துக் கொள்வான். என்னைக் கட்டிக் கொண்டு படுக்காவிட்டால், அவனுக்கு தூக்கமே வராது. நான் சற்று முகம்வாடி இருந்தால் அவனுக்கு பொறுக்காது. ஏதாவது ஹாஸ்யமாக பேசி, கதைகள் சொல்லி என்னுடைய மனோநிலையை மாற்றுவான். மாலை நேரத்தில் சாலை ஓரமாக, நதிக்கரை ஓரமாக, கடைவீதிகளில் தோள்மீது கைகளைப் போட்டுக் கொண்டு உலா போவோம். அப்பொழுது எவ்வளவுபேர் என்னை பார்த்துப் பொறாமைப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? "

"அதோடு மட்டுமில்லை அண்ணா, அவனை நான் பலமுறை கிண்டலாக பேசியிருக்கின்றேன். ஒருநாள் நானும் அவனும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொண்டிருந்தோம். அப்பொழுது நான் அவனைப் பார்த்து என்ன கேட்டேன் தெரியுமா? கிருஷ்ணா நீ வாழ்க்கையில் உண்மையே பேசுவதில்லை என்று ஏதாவது சங்கல்பம் செய்து

கொண்டுள்ளாயா? என்றெல்லாம் கேட்டுள்ளேனே'' என்று கூறி அழுதான். ஒன்றா, இரண்டா அவனிடம் நான் எவ்வளவு முறை தவறிழைத்திருப்பேன். எதிர்த்துப் பேசுவேன். அதிகப்பிரசங்கி போல், அவனுக்கே உபதேசம் செய்வேன். அவனை அலட்சியப்படுத்தியுள்ளேன். நான் சொன்னதில் எவ்வளவோ விஷயங்களை அவன் கேட்கவில்லை. சில சமயங்களில் அவனையே, நான்தான் காப்பாற்றுவதாக தோன்றும். அவனுக்கே புத்திமதிகள் சொல்வேன். சில சமயங்களில் அவனுக்கே ஆலோசனைகளும் சொல்வேன். அவன் செய்யும் காரியங்களில் குற்றமும் கண்டு பிடிப்பேன். இப்படி ஒன்றா இரண்டா? அவனிடம் நான் பட்ட அபராதங்களை பரம கருணையுடன் பொறுத்துக் கொண்டுள்ளானே'' என்று கூறி கதறினான் .

அதே அர்ஜுனன், அதே ரதம், அதே குதிரைகள், அதே காண்டீபம், அப்பொழுது வெற்றி மேல் வெற்றியை எனக்கு பெற்று தந்த இவைகள் இன்று என்ன ஆயின? காரணம் எனக்கு புரிந்துவிட்டது. இப்பொழுது பகவான் கிருஷ்ணன் என்னுடன் இல்லை. அது ஒன்றுதான் காரணம்.

நான் வரும் வழியில் காட்டில் சாதாரண திருடர்களால், விரட்டப்பட்டேனே! அவர்களிடம் தோல்வி அடைந்துவிட்டேனே. அதே அர்ஜுனன், அதே ரதம், அதே குதிரைகள், அதே காண்டீபம், அப்பொழுது வெற்றி மேல் வெற்றியை எனக்கு பெற்று தந்த இவைகள் இன்று என்ன ஆயின? காரணம் எனக்கு புரிந்துவிட்டது. இப்பொழுது பகவான் கிருஷ்ணன் என்னுடன் இல்லை. அது ஒன்றுதான் காரணம். மேலும், யதுகுலமே பிராமண சாபத்திற்கு ஆளாகி அழிந்துவிட்டது. பூபாரம் குறைய வேண்டும் என்ற சங்கல்பத்துடன் அவதாரம் செய்த பகவான் பூபாரத்தைக் குறைத்துவிட்டான். இப்பொழுது யதுகுலத்தில் சரியாக ஐந்து நபர்களே மிஞ்சியுள்ளனர் என்று கூறி மீண்டும் தளர்ந்த மனம் உடையவன் ஆனான். அர்ஜுனனுக்கு யுத்தகளத்தில் பகவான்

உபதேசம் செய்த பகவத்கீதை, அப்பொழுது உதவியதுபோல் இப்பொழுதும் உதவியது. பகவான் சொன்னதை முழுவதுமாக ஒருமுறை சொல்லிப் பார்த்தான். அவனிடமே பூர்ண சரணாகதி அடைந்தான். பகவான் தர்மம் குறையும்பொழுது ஒவ்வொரு முறையும் அவதரிப்பான் என்று கூறியதை நினைத்துப் பார்த்தான். அப்பொழுதெல்லாம், நரன் ஆன நாம் நாராயணனுடன் அவதரிப்போம் என்று நினைத்து, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான். இவற்றையெல்லாம் கேட்ட தர்மபுத்திரர், பகவான் இல்லாத பூமியில் ஒரு கணம் கூட இருக்கக்கூடாது என்று முடிவு செய்தார்.

(கனியும்)

**சனாதனப் புதிர் : பகுதி – 44** –ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில்)

1. ஒரு அரசன் புத்திரன் குறித்து யாகம் செய்ய அவனே கர்ப்பம் தரித்து ரண சிகிச்சை மூலமாக குழந்தை பிறந்தது. அந்த அரசனின் பெயர் என்ன?
2. கோபம் அடைந்த இந்திரன் ஒரு முனிவரது கையை வெட்ட வர முனிவர் தனது தவ வலிமையால் இந்திரனின் கைகளை அசைவற்றுப்போகச் செய்தார்? அந்த முனிவர் யார்?
3. ரிக் வேதத்தில் அக்னி எப்படி வர்ணிக்கப்படுகிறார்?
4. ஸ்ரீக்ருஷ்ண பகவானுக்கு துவாரகாபுரியை நிர்மாணம் செய்து கொடுத்தவர் யார்?
5. மயனால் இந்திரப்பிரஸ்தத்தில் தர்மபுத்திரருக்காக அமைக்கப்பட்ட சபையின் பெயர் என்ன?
6. இந்திரனுடைய குழந்தைகள் பெயர் என்ன?
7. இந்திரன் கரையான் உருக்கொண்டு ருத்ரனின் வில்லின் நாண் கயிற்றை அறுத்த சம்பவம் வேதத்தில் எங்கு காணப்படுகிறது?
8. கல்யாணம் ஆன மாப்பிள்ளை , மணப்பெண் ஆகாய மண்டலத்தில் யாரை தரிசனம் செய்ய வேண்டும்?
9. கௌதமரின் பிள்ளையின் பெயர் என்ன? இவரது பேரன் பேத்திகள் யார்? இவர் உற்பத்தி செய்த நதி எது?
10. ரிக்வேதத்தில் எத்தனை மண்டலங்கள், ஸூக்தங்கள் - ரிக்குகள்/ மந்திரங்கள் இருக்கின்றன?

# ஸ்ரீ ஸுதர்சந சதகம்

-ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது



(செப்டம்பர் இதழ் தொடர்ச்சி)

**நாபி வர்ணனம் 51. அரசு ஆதரவு கிட்ட**

ஐக்யேந த்வாதசாநாமசிசிரமஹஸாம்
 தர்சயந்தீ ப்ரவ்ருத்திம்
தத்த: ஸ்வர்லோகலக்ஷ்ம்யாஸ்
 திலக இவ முகே பத்மராகத்ரவேண
தேயாத் தைதேயதர்பக்ஷதிகரண
 ரணப்ரீணிதாம் போஜநாபி:
நாபிர் நாபித்வமுர்வ்யாஸ்ஸுரபதி
 விபவஸ்பர்சி ஸௌதர்சநீ வ:

52. **செய்வனவெல்லாம் சிறப்புற**

சஸ்த்ரச்யாமே சதாங்கக்ஷிதிப்ருதி
 தரலைருத்தரங்கே துரங்கை:
த்வங்கந்மாதங்கநக்ரே குபித-
 படமுகச்சாயமுக்த்த ப்ரவாலே ।
அஸ்தோகம் ப்ரஸ்நுவாநா ப்ரதி-
 படஜலதௌ பாடவம் வாடவஸ்ய
ச்ரேயோ வஸ்ஸம்விதத்தாம் ச்ரித-
 துரிதஹரா ஸ்ரீதராஸ்த்ரஸ்ய நாபி: ॥52॥

53. **காத்து ரட்சித்தருள**

ஜ்வாலாசூடாலகாலாநலசலந-
 ஸமாடம்பரா ஸாம்பராயம்
யாஸாவாஸாத்ய மாத்யத்ஸுரஸுபட-
 புஜாஸ்போடகோலாஹலாட்யம் ।
தைத்யாரண்யம் தஹந்தி விரசயதி
 யசோபூதிசுப்ராம் தரித்ரீம்
ஸா வச்சக்ரஸ்ய நக்ரஸ்யதம்ருதித-
 கஜத்ராயிணீ நாபிரவ்யாத் ॥53॥

54. **நலன் குன்றாமலிருக்க**

விந்தந்தீ ஸாந்த்யமர்ச்சிர்விதலித-
வபுஷ: ப்ரத்யநீகஸ்ய ரக்தை:
ஸ்பாயந்நக்ஷத்ரராசிர்த்திசிதிசி கணச:
கீகஸை: கீர்யமாணை: ।
நாகௌக: பக்ஷ்மலாக்ஷீநவமத-
ஹஸிதச்சாயயா சந்த்ரபாதாந்
ராதாங்கீ விஸ்த்ருணாநா ரசயது
குசலம் பிண்டிகாயாமிநீ வ: ॥54॥

55. **உலகப்புகழ் உயர்வடைய**

நிஸ்ஸீமம் நிஸ்ஸ்ருதாயா புஜதரணி-
தராகாடத: கைடபாரே:
ஆசாகூல ங்கஷுர்த்தேரஹிதபல-
மஹாம்போதிமாஸாதயந்த்யா: ।
சக்ரஜ்வாலாபகாயாச்சல-
தரலஹரீமாலிகாதந்துராயா:
பிப்ரத்யாவர்த்தபாவம் ப்ரமயது
புவநே பிண்டிகா வ: ப்ரசஸ்திம் ॥55॥

56. **தங்கு தடையின்றி சுகம் பெற**

பாணௌக்ருத்வாஹவாக்ரே ப்ரதிபட-
விஜயோபார்ஜிதாம் வீரலக்ஷ்மீம்
ஆநீதாயாஸ்ததோ அஸ்யா: ஸ்வஸவித-
மஸுரத்வேஷிணா பூருஷேண ।
ப்ராஸாதம் வாஸஹேதோர்விரசித-
மருணை ரச்மிபிஸ்ஸூசயந்தீ
நாபிர்வோ நிர்மிமீதாம் ரதசரண-
பதேர்நிர்வ்ருதிம் நிர்விகாதாம் ॥56॥

57. **கர்மவினை அகல**

டிண்டீரா பாண்டுகண்டைரரியுவதி-
முகை: பிண்டிகா க்ருஷ்ணஹேதே:
உச்சண்டாச்ருப்ரவர்ஷைருபரததிலகை-
ருக்தசௌண்டீர்யசர்யா ।

த்வித்ரக்ராமாதிபத்யத்ருஹிண
மதமஷீதூஷிதாக்ஷக்ஷமாப்ருத்
ஸேவாஹேவாகபாகம் சமயது
பவதாம் கர்ம சர்மப்ரதீபம் ॥57॥

58. **குபேர சம்பத்து அருள**

பர்யாப்தாமுந்நதிம் யா ப்ரதயதி
கமலம் யா திரோபாவ்ய பாதி
ஸ்ரஷ்டுஸ்ஸ்ருஷ்டேர்த்தவீய: குவலய-
மஹிதம் யா பிபர்த்தி ஸ்வரூபம் ।
பூம்நா ஸ்வேநாந்தரிக்ஷம் கபலயதி
ச யா ஸா விசித்ரா விதத்தாம்
தைதேயாராதிநாபிர்த்ரவிணபதி-
பதத்ரோஹிணீம் ஸம்பதம் வ: ॥58॥

59. **அவமானமின்றி வாழ**

வாணீ வாங்கைச்சதுர்பிஸ்ஸதஸி
ஸுமநஸாம் த்யோதமாநஸ்வரூபா
பாஹ்வந்த:ஸ்தா முராரேரபிமத-
மகிலம் ஶ்ரீரிவ ஸ்பர்சயந்தீ ।
துர்க்கேவோக்ராக்ருதிர்யா த்ரிபுவந-
ஜநநஸ்தேமஸம்ஹாரதுர்யா
மர்யாதாலங்கநம் வ: க்ஷபயது
மஹதீ ஹேதிவர்யஸ்ய நாபி: ॥59॥

60. **அசுபத்தை தவிர்க்க**

ஸ்ரக்பிஸ்ஸந்தாநஜாபிர்மதுர-
மதுரஸஸ்யந்தஸந்தோஹிநீபி:
பாடீரை: ப்ரௌடசந்த்ராதபசய-
ஸுஷமாலோபநைர்லேபநைச்ச ।
தூபை: காலாகரூணாமபி ஸுர-
ஸுத்ருசோ விஸ்ரமர்ச்சாஸுயஸ்யா:
கந்தம் ருந்தந்தி ஸா வச்சிரம
ஸுரபிதோ நாபிரவ்யாதபவ்யாத் ॥60॥

**61. கண்கள் ஆனந்தமடைய**

அமஸ் ஸம்ஹ்ருத்ய தக்த்வா
ப்ரதிஜநிஜநிதம் ப்ரௌடஸம்ஸார வந்யா
தூராத் வந்யாந தந்யாந் மஹதி
விநதிபிர் தாமநி ஸ்தாபயந்தீ
விஸ்ராந்திம் சாஸ்வதீம் யா நயதி ரமயதாம்
சக்ரராஜஸ்ய நாபி:
ஸம்யந்மோ முஹ்யமாநத்ரிதசரிபுதசா
ஸாக்ஷிணீ ஸாக்ஷிணீ வ: ॥61॥

**அக்ஷ வர்ணனம் 62. பொருளாசை விலக**

ஸ்ருத்வா யந்தாமசப்தம் ஸ்ருதிபதகடுகம்
தேவநக்ரீடநேஷு
ஸ்வர்வைரிஸ்வைரவத்யோ
பயவிவசதிய: காதரந்யஸ்தசாரா:
மந்தாக்ஷம் யாந்த்யமந்தம் ப்ரதியுவதி முகைர்
தர்சிதோத்ப்ராஸதர்பை:
அக்ஷம் சௌதர்சனம் தத் க்ஷபயது
பவதாமே தமாநாம் தநாயாம் ॥62॥

**63. சத்ரு நாசனத்திற்காக**

வ்யஸ்தஸ்கந்தம் விசீர்ணப்ரஸவபரிகரம்
ப்ரத்தபத்ரோபமர்தம்
ஸம்யத்வர்ஷாஸு தர்ஷாதுரககபரிஷத்
பீ தரக்தோதகாஸு
அக்ஷம் ரக்ஷஸ்தரூணாமாசநிவதசநை:
ஆபதந்மூர்த்நிமூர்த்நி
ஸ்தாதஸ்த்ராதீசிதுர்வ: ஸ்தபகிதயசஸோ
த்வேஷிணாம் ப்லோஷணாய ॥63॥

**64. தேவ பதவி சித்திக்க**

தீக்ஷாம் ஸ்ங்க்ராம ஸத்ரே மஹதி க்ருதவதோ
தீப்திபிஸ்ஸம்ஹதாபி:
ஜிஹ்வாலே ஸப்தஜிஹ்வே தநுஜகுலஹவிர்
ஜுஹ்வதோ நேமிஜுஹ்வா

வைகுண்டாஸ்த்ரஸ்ய குண்டம் மஹதிவ
விலஸத் பிண்டிகாவேதிமத்யே
திஸ்யாத் திவ்யர்த்திதேஸ்யம் பதமிஹ
பவதாமக்ஷதோந்மேக்ஷமக்ஷம் ॥64॥

65. **சத்ரு தோல்வி அடைய**

துங்காத் தோர த்ரிஸ்ருங்காத் தநுஜவிஜயிந:
ஸ்பஷ்டதாநோ த்யமாநாம்
சத்ருஸ்தம் பேரமாணாம் சிரஸிநிபதத:
ஸ்ரஸ்தமுக்தாஸ்த்திபுஞ்ஜே
ரக்தைரப்யக்தமூர்த்தேர் விதலநகலிதைர்
வ்யக்தவீராயிதர்த்தே:
ஹர்யக்ஷஸ்யாரிபங்கம் ஜநயது ஜகதாம்
ஈடிதம் க்ரீடிதம் வ: ॥65॥

**66.பெருமை ஓங்க**

உந்மீலத் பத்மராகம் கடகமிவ த்ருதம்
பாஹூநா யந் முராரே:
தீப்தாந் ரஸ்மீந் ததாநம் நயநமிவ
யதுத்தாரகம் விஷ்டபஸ்ய
சக்ரேசார்கஸ்ய யத்வா பரிதிரபிததத்
தைத்யஹத்யாமிவ த்ராக்
அக்ஷம் பக்ஷே பதித்வா பரிகடயது வ:
தத் த்ரடிஷ்டாம் ப்ரதிஷ்டாம் ॥66॥

67.**சந்தேக சம்சயம் அகல**

க்ரீடத் ப்ராக் க்ரோட தம்ஷ்ட்ராஹதி
தளித ஹிரண்யாக்ஷவக்ஷ: கவாட
ப்ராதுர்ப்பூதப்ரபூத க்ஷதஜ
ஸமுதிதாருண்யமுத்ரம் ஸமுத்ரம்
உந்மீலத் கிம்சுகாபைருபஹஸதமிதை:
அம்சுபி: ஸம்சயக்நீம்
அக்ஷம் சக்ரஸ்ய தத்தாமகசதசமநம்
தாஉஷீம் சேமுஷீம் வ: ॥67॥

**68. சூரிய, சந்திர, அக்கினி அருள் பெற**

பத்மோல்லாஸப்ரதம் யஜ் ஜநயதி
ஜகதீமேதமாநப்ர போதாம்
யஸ்ய ச்சாயாஸமாநா லஸதி பரிஸரே
ரோஹிணீ தாரகாக்ர்யா
நாநாஹேத்யுந்நதத்வம் ப்ரகடயதி ச யத்
ப்ராப்தக்ருஷ்ணப்ரயாணம்
த்ரேதா பிந்நஸ்ய தாம்நஸ் ஸமுதய இவ தத்
பாது வச் சாக்ரமக்ஷம் ॥68॥

**69. இடையூறின்றி வாழ**

சோசிர்பி: பத்மராகத்ரவஸமஸூ ஷமைர்
சோபமாநாவகாசம்
ப்ரத்யக்ராசோகராகப்ரதிபடவபுஷா
பூஷிதம் பூருஷேண
அந்த: ஸ்வச்சந்தமக்நோத்திதப்ருகுதநயம்
க்ஷத்ரியாணாம் ஹதாநாம்
ஆரப்தம் சோணிதௌகைஸ்ஸர இவ பவதோ
திவ்யஹேத்யக்ஷமவ்யாத் ॥69॥

**70. புத்தி நுட்பம் மேன்மையுற**

மத்தாநாமிந்த்ரியாணாம் க்ருதவிஷய
மஹாகாநநக்ரீடநாநாம்
ஸ்ருஷ்டம் சக்ரேஸ்வரேண க்ரஹண
திஷணயா வாரிவத் வாரணாநாம்
கம்பீரம் யந்த்ரகர்தம் கமபி க்ருததியோ
மந்வதே யத் ப்ரதேயாத்
அஸ்தூலாம் ஸம்விதம் வஸ் த்ரிஜகதபிமத
ஸ்தூலலக்ஷம் ததக்ஷம் ॥70॥

**71. விருப்பம் நிறைவேற**

ப்ரணாதீந் ஸந்நியம்ய ப்ரணிஹிதமநஸாம்
யோகிநாமந்தரங்கே
துங்கம் ஸங்கோச்ய ரூபம்
விரசித தஹராகாச க்ருச்ஸ்ராஸிகேந

ப்ராப்தம் யத் பூருஷேண ஸ்வமஹிம
ஸத்ருசம் தாம காமப்ரதம்வ:
பூயாத் தத் பூர்புவஸ் ஸ்வஸ்த்ரய
வரிவஸிதம் புஷ்கராக்ஷாயுதாக்ஷம் ||71||

**72. எந்த சமயத்திலும் காக்க**

வித்தாந் வீத்ரேண தாம்நா சரணநகபுவா
பத்தவாஸஸ்ய மத்யே
சக்ராத்யக்ஷஸ்ய பிப்ரத் பரிஹஸித
ஜபாபுஷ்பகோசாந் ப்ரகாசாந்
சுப்ரைரப்ரைரதப்ரைச் சரதி தத இதோ
வ்யோம விப்ராஜமாநம்
ப்ராதஸ்த்யாதித்யரோசிஸ் ததமிவ
பவத: பாது ராதாங்கமக்ஷம் ||72||

**73. பிழை செய்யாதிருக்க**

ஸ்ரீவாணீ வாங்ம்ருடாந்யோ விததி
பஜநம் சக்தயோ யஸ்ய திக்ஷூ
ப்ராஹ வ்யூஹம் யதாத்யம்
ப்ரதமமபி குணம் பாரதீ பாஞ்சராத்ரீ
கோராம் சாந்தாம் ச மூர்த்திம் ப்ரதயதி
புருஷ: ப்ராக்தந: ப்ரார்த்தநாபி:
பக்தாநாம் யஸ்ய மத்யே திசது
ததநகாமக்ஷமத்யக்ஷதாம் வ: ||73||

**74. பொறாமை குணம் நீங்க**

ரக்ஷ:பக்ஷேண ரக்ஷத் க்ஷதமமரகணம்
வக்ஷ்யவைலக்ஷ்யமாஜௌ
லக்ஷ்மீமக்ஷீயமாணாம் வலமதநபுஜே
வஜ்ரசிக்ஷாநபேக்ஷ
நிக்ஷிப்ய க்ஷிப்ரமத்ய க்ஷயதி ஜகதி
யத் தக்ஷ தாம் திவ்ய ஹேதே:
அக்ஷாமாமக்ஷமாம் தத் க்ஷபயது
பவதாமக்ஷஜில்லக்ஷமக்ஷம் ||74||

(75 முதல்
அடுத்த இதழில்
இடம்பெறும்)

## பாகவதரஸ ஸ்ம்ருதி

கோகுலத்தில் கண்ணன் தன் சொத்தான கோகுலவாசிகளையும், பசுக்களையும், கன்றுகளையும் காக்க கோவர்த்தன மலையையே தன் சுண்டு விரலால் தூக்கி குடையாக தாங்கினான். ஏழு வயதே நிரம்பிய பாலகனால் இது சாத்தியமா என்று பலர் வியந்தனர்! இதில் வியப்பிற்கு இடம் ஏது?



தானே, முன்பு எடுத்த வராஹ அவதாரத்தில், இந்த பூமியையே தனது தெத்தி பற்களால் தூக்கியவனுக்கு, அந்த பூமியின் ஒரு சின்னஞ்சிறு பாகமேயான இந்த கோவர்தன மலையை விரலில் ஏந்துவதில் என்ன சிரமம் இருக்க முடியும்? ஸ்ரீ ஜெயதேவர் அஷ்டபதியில் இதை பாடும் போது

*வஸதி தசன சிகரே தரணீ தவ லக்னா*
*சசினி களங்க களேவ நிமக்னா*
*கேசவ! த்ருத ஸூகர ரூப! ஜய ஜகதீஸ ஹரே*

என்று மிக ரசனையுடன் கூறுகிறார். பகவான் தன் பளபளக்கும் வெண்மையான தெத்தி பல்லால், பூமியை தூக்கி கொண்டதை பார்த்தால், மூன்றாம் பிறை சந்திரன் போன்று உள்ளது என்று அனுபவிக்கிறார். இப்பேர்பட்ட பகவானான கண்ணன், ஒரு சிறு மலையை தூக்கியதில் வியப்பென்ன?

(நமது சத்குருநாதர் கோகுலாஷ்டமி உத்ஸவத்தில் அருளிய பாகவத ப்ரவசனங்களில் இருந்து)

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று –6



திரு.எஸ்.ராஜப்பன்

திருமுக்கூடல் ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில், சோழர் காலத்தில் திருவாய்மொழி சேவா காலம் செய்யப்பட்டு வந்துள்ளதும் இங்குள்ள கல்வெட்டுக்களின் வாயிலாக அறியப்படுகின்றது. சோழர் பல்லவ மன்னர்கள் ஆன்மீகத்துடன், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளை வெகுவாகப் பாதுகாத்து வந்துள்ள மாண்பினை, இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள் பறைசாற்றுகின்றன. தற்பொழுது இத்திருக்கோயில், இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது.

இத்திருக்கோயிலில் மற்றொரு முக்கியமான அம்ஸம் உள்ளது. கர்ப்பக்கிரகத்தில் பெருமாளுக்கு இடப்புறம் பீடத்தில் ஸ்ரீசுதர்சன ஆழ்வாரும் (சக்கரம்) ஸ்ரீபாஞ்சசன்னியமும் (சங்கு) திருக்காட்சியளிக்கின்றார்கள். தொண்டைமான் சக்கரவர்த்தி, தன்னிடம் திருவேங்கடமுடையான் கொடுத்தருளிய சங்கு சக்கரம் இரண்டையும், மோக்ஷம் வேண்டி இத்திருத்தலத்திற்கு வந்தபோது, பகவானிடம் சமர்ப்பித்துவிட்டு, பகவானின் திருவடிகளில் சேர்ந்ததனைக் காட்டும் வண்ணமாக இத்திருக்காட்சி அமைந்துள்ளதன்றோ!

நமது சத்குருநாதர் எங்களிருவரிடமும், இந்த அற்புத சேவை பற்றிக் குறிப்பிட்டு, எங்களை நன்கு பார்த்து சேவித்து விட்டுவரப் பணித்தது, நினைவில் கொள்ளத்தக்கதாகும். இத்திருக்கோயில் வார நாட்களில் காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் திறந்திருக்கும். சனி ஞாயிறு தினங்களில் காலை 8.30 மணி முதல் 1 மணி வரையிலும் மாலை 3மணி முதல் 7 மணி வரையிலும் சன்னிதி திறந்திருக்கும் என கூறப்படுகிறது. இங்கு பெருமாளை நன்கு சேவித்துவிட்டு புறப்பட்டோம்.

மாலை சுமார் 6.45 மணியளவில் பழைய சீவரம்

வந்தடைந்தோம். பழைய சீவரம் ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மப் பெருமாள் கோயில், பாலாற்றங்கரையிலுள்ள ஓர் சிறிய குன்றின் இடைப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்திற்கு பத்மகிரி என்னும் திருப்பெயரும் வழங்கப்படுகிறது. இத்திருக்கோயிலை சென்றடைய படிக்கட்டுகள் கொண்ட நடைபாதையும், வாகனங்களில் செல்ல சாலை வசதியும் உள்ளன. இத்திருக்கோயிலின் ஸ்தல புராணத்தைப் பார்க்கலாமா?

ஒரு முறை விஷ்ணு சித்தர் என்னும் மஹரிஷி, நைமிசாரண்யத்தில் மற்ற மகரிஷிகளை நோக்கி தவம் இயற்றி ஸ்ரீமஹாவிஷ்ணுவின் தரிசனத்தைப் பெறுவதற்கு உகந்த இடம் எது? என்று வினவினார். மரீச்சமுனி என்னும் மஹரிஷி, பத்மகிரி என்னும் திருத்தலம் தான் அதற்கு சரியான இடம் என்று கூறினார். மேலும் அவர் அத்திரி மஹரிஷி அங்கு கடின தவம் புரிந்து, பகவானை ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மராக தரிசனம் செய்தார். அவர் பெருமாளிடம் இந்த ஸ்தலத்திலேயே, தேவரீர் தங்கி கலியுகத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டார். பகவானும், அவரது விண்ணப்பத்தை ஏற்று, அங்கேயே தங்கிவிட்டார் என்று கூறினார்.

இங்கு கர்ப்பக்கிரகத்தில் மூலவர் ஸ்ரீநரஸிம்ஹர் சாந்த ஸ்வரூபியாக, ஸ்ரீமஹாலக்ஷ்மித்தாயாரைத் தமது இடது துடையில் அமர்த்திக்கொண்டு, அழகுடன் கொலுவீற்றிருக்கும் திருக்காட்சி நம் கண்களுக்கு விருந்தாகவும், மனதிற்கு நிறைவு தருவதாகவும் இருக்கிறது. கர்ப்பக்கிரஹத்திற்கு தென்புறமாக தாயார், அஹோபிலவல்லித் தாயார் எனத் திருநாமம் கொண்டு, தனி சன்னிதியில் கொலுவீற்றிருந்து அருள் பாலிக்கிறார். வடபுறம் ஸ்ரீஆண்டாள் சன்னிதியும், தென் கிழக்கு திசையில் நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்களுக்கு சன்னிதி அமைந்துள்ளது. வெளி ப்ரகாரத்தில் த்வஜ ஸ்தம்பம் அமைந்துள்ளது. கோவிலின் கிழக்கு முகமாக ராஜகோபுரம் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருடந்தோறும் தைமாதம் காணும் பொங்கலன்று, காஞ்சீபுரத்திலிருந்து பரிவேட்டை அல்லது மலை உத்ஸவம் என்னும் உத்ஸவத்திற்கு ஸ்ரீவரதராஜப் பெருமாள் எழுந்தருளுகிறார்.

(தொடரும்)

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

## Our products

Globe Tipper




Unit Converter




Smart Alarm Pro




DRACO, The Dragon




## Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

rb

# rajmani builders

launches its new project

# "rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
website: www.rajmanibuilders.com

# பாலகர்களுக்கு ஒரு கதை



## ஒரு தாமரை

புத்தர் ஒருமுறை பஞ்சத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்த ஊருக்கு சென்று இருந்தார். மழையே இல்லாமல் அந்த பூமி வறண்டு போய் இருந்தது. செடிகள் எல்லாம் கருகி இருந்தன. அந்த தேசத்து மன்னன் அப்பொழுது புத்தரை சந்தித்து தன் தேசம் செழிப்புற அருளுமாறு வேண்டி கொள்ள முடிவு செய்தான்.

அவன் புத்தரை தேடி வருகையில் வழியில் ஒரு தோட்டக்காரனை பார்த்தான். அவன் கையில் ஒரு அழகான தாமரை இருந்தது. அதை பார்த்தவுடன் மன்னன் மிகவும் ஆச்சரியப்பட்டு "ஊர் முழுவதும் நீர் இல்லாது தவிக்க உன்னிடம் மட்டும் எப்படி இந்த தாமரை பூத்தது?" என்று கேட்டான்.

அதற்கு அந்த தோட்டக்காரன் மரியாதையுடன் "மன்னா! நான் மிகவும் குறைவாக தண்ணீரை செலவழித்தேன். அப்படி மிச்சப்படுத்திய நீரை கொண்டு இந்த தாமரைசெடிக்கு தினமும் நீர் வார்த்தேன். அதில் பூத்தது இது" என்றான். மன்னன் மிகவும் மகிழ்ந்தான். அதை புத்தருக்கு தர ஆசைப்பட்டான். அதனால் அவன் தோட்டக்காரனிடம் "ஆயிரம் நாணயங்கள் தருகிறேன். உன் தாமரையை எனக்கு தா" என்றான். ஒரு தாமரைக்கு ஆயிரம் நாணயமா என்று ஆச்சரியப்பட்டான் தோட்டக்காரன். உடனே மன்னன் "ஏன் யோசிக்கிறாய், நான் பத்தாயிரம் தருகிறேன். போதுமா?" என்றான். அதை கேட்ட தோட்டக்காரன் "மன்னா! மிக்க நன்றி. ஆனால் எதற்காக இவ்வளவு விலை கொடுத்து இதை பெறுகிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றான். மன்னன் அவனிடம் "இதை புத்தருக்கு தர போகிறேன். அவரருளால் நம் நாடு செழிக்கும் அல்லவா?" என்றான்.

உடனே தோட்டக்காரன் "புத்தருக்கா! எனக்கு பணம்

வேண்டாம். அவரருளால் பிரஜைகள் சௌக்கியம் அடைவார்கள். மழை வரும். வேறு என்ன வேண்டும்? அவரை தரிசிக்க நானும் வருகிறேன். அவர் திருவடிகளில் நானே சமர்ப்பிப்பேன்" என்றான். என்ன சொல்லியும், பணம் வாங்கி கொள்ள மறுத்து விட்டான். மேற்கொண்டு மன்னன் மந்திரிகளுடன் சென்று, புத்தரை தரிசித்து வணங்கினான். தன் தேசத்து நிலவரத்தையும் தோட்டக்காரனின் ஆசையையும் தெரிவித்தான்.

தோட்டக்காரன் ஏழையாயிற்றே? புத்தரை தரிசிக்க ஓரத்தில் ஒதுங்கி இருந்தான். அவனை புத்தர் அருகில் அழைத்தார். அவன் அச்சமும் பக்தியும் பொங்க, புத்தரருகே வந்தான். தன் கையில் இருந்த தாமரையை அவர் திருவடிகளில் சமர்ப்பிக்க போனான். புத்தர் அதற்கு விடவே இல்லை. அவனை அப்படியே இழுத்து அணைத்தார். இறுக்க கட்டி தழுவினார். புத்தர் கண்களில் ஆனந்த கண்ணீர். அந்த தோட்டக்காரனின் மயிர்க்கால்கள் குத்திட்டன. பிறவி பயனுற்றதாக நினைத்தான்.

புத்தர் அப்பொழுது "அன்பா! கஷ்டப்பட்டு வளர்த்த இந்த ஒரு தாமரையை எனக்காக சமர்ப்பித்தாய். மன்னன் தந்த பணத்தையும் உனது ஏழ்மை நிலைமையை கூட பாராது மறுத்தாய். உனது அன்பு என்னை கட்டி போட்டு விட்டது. இந்த தாமரை வாடவே வாடாது" என்றார். அந்த தாமரை பலப்பல வருடங்களுக்கு புத்தர் காலத்திற்கு பிறகும் கூட வாடாமல் இருந்தது என்கிறார்கள். மன்னவன் தோட்டக்காரனின் பாக்யத்தை நினைத்து ஆச்சரியப்பட்டான்.


**"மதுரம் ஸ்டால்"**



*நவராத்திரி கொலு பொம்மைகள்*

*மற்றும் குங்குமம், மஞ்சள் முதலிய அனைத்து மங்கள திரவியங்களும் பூஜா சாமான்களும் கிடைக்கும். ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் அடங்கிய ஒலித்தட்டுக்கள் மற்றும் ஆன்மீக நூல்கள் கிடைக்கும்.* **முகவரி**:

மதுரம், 38/22, தம்பையா ரோடு எக்ஸ்டென்ஷன், மேற்கு மாம்பலம், சென்னை 33

(9AM-12, 4-8PM). +914423727400 /+919442613710, email:publications@namadwaar.org

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

## சத்சங்க செய்திகள்

**ஆகஸ்டு 29 - செப்டம்பர் 4 -** புருஷோத்தம மாதத்தை ஒட்டி, கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் காலை விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யமும், மாலை ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மஹாப்ரபுவின் சரித்திரமும் உபன்யாசம் செய்தார்கள். திருநாங்கூர் ஸ்ரீமதி ஜெயந்திஜானகிராமன் நினைவு திராவிட வேதபாடசாலா வித்யார்த்திகளுக்கு பாராட்டு பத்திரங்களையும் வழங்கினார்கள்.

**செப்டம்பர் 8 -** தஞ்சாவூர் ஸ்ரீநவநீதகிருஷ்ணன் கோவில் பகவத்கீதா மண்டபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி, 'கிருஷ்ணஜனனம்' குறித்து உபன்யாசம் செய்தார்கள்.

**செப்டம்பர் 2-9 -** சென்னை மாம்பலம் அயோத்யா மண்டபத்தில் ஜனாபாய் டிரஸ்ட் சார்பாக காலை 6 முதல் மாலை 5வரை அகண்ட "ஹரே ராம" மஹாமந்திர நாமகீர்த்தனமும் மாலை ஈரோடு திரு.பாலாஜி பாகவதரின் பாகவத உபன்யாசமும் நடைபெற்றது. பூர்த்தி நாளன்று ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் அயோத்யாமண்டபம் சுற்றி உள்ள வீதிகளில் நகரகீர்த்தனம் மிக அழகாக நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**செப்டம்பர் 12 - 18 -** பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி சப்தாஹமாக பாகவத ப்ரவசனம் செய்தார்கள். திரளான அன்பர்கள் வந்து சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஆகஸ்டு - 23 -** உடுமலைப்பேட்டையில் இரு பள்ளிகளில் ராமானுஜம்ஜி சுமார் 3000மாணவர்கள் முன்னிலையில் கூட்டு பிரார்த்தனை நடத்தினார். அருகில் அந்தியூரில் ஒரு எளிமையான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் நிகழ்த்தினார்.

**செப்டம்பர் 6 -** திருச்சூர் பாரதீய வித்யாபவன் மற்றும் பரமேகாவு வித்யா மந்திர் பள்ளிகளிலும் ராமானுஜம்ஜி தேர்வுகளை எப்படி

எதிர்கொள்வது என்பது குறித்து மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அன்றே Happiness at Work என்கிற தலைப்பில் Thrissur Management Association (TMA) இல் ராமானுஜம்ஜி உரை நிகழ்த்தினார். இதில் திருச்சூர் நகரத்தை சேர்ந்த பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு மிகவும் பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**செப்டம்பர் 7 –** ராமானுஜம்ஜி முன்னிலையில் தூத்துக்குடி நாமத்வாரில் மிக அழகாக புராநவா புதிர் போட்டி நடைபெற்றது. ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பல நகரங்களில் இருந்தும் 42 பள்ளிகளை சேர்ந்த மாணவமாணவிகள் இதில் உற்சாகமாக கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக தங்கபாண்டியன்ஜி மற்றும் சுப்பையாஜி கலந்து கொண்டனர். கடினமாக உழைத்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு தங்ககாசு, வெள்ளி பேனா, கடிகாரம் முதலான பரிசுகள் வழங்கப்பட்டன. விழா தூத்துக்குடி நாமத்வார் அன்பர்களால் மிக அழகாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**செப்டம்பர் 3 – 9 –** சாத்தூர் அருகே தாயில்பட்டி கிராமத்தில் ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ம பெருமாள் கோவிலில் ஸ்ரீவல்லபதாஸ் அவர்களின் பாகவத சப்தாஹ ப்ரவசனம் நடைபெற்றது. தினமும் பல அன்பர்கள் வந்திருந்தனர். பூர்த்தி அன்று நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள நகரசங்கீர்த்தனமும் இடம் பெற்று இருந்தது.

**செப்டம்பர் 10 –** தாம்பரத்தில், அமைந்துள்ள வள்ளுவர் குருகுலம் என்கிற சுதந்திர போராட்ட தியாகிகளால் அமைக்கப்பட்ட பள்ளியில், ராமானுஜம்ஜி மற்றும் ஸ்ரீபாலாஜி மாணவர்களுடன் ஒரு கூட்டு மஹாமந்திர பிரார்த்தனை நிகழ்த்தினர். மாணவர்களிடம் உயர்பண்புகளை வளர்ப்பதை மையமாக வைத்து, பள்ளி ஆசிரியர்களுடன் ஒரு நிகழ்ச்சியையும் நடத்தினர். இந்த நிகழ்ச்சியை பள்ளி செயலர் திரு.டி.கே.ஸ்ரீனிவாசன்ஜி மிகவும் பாராட்டினார்.

**செப்டம்பர் 22 –** ராமானுஜம்ஜி மற்றும் ஸ்ரீசாந்தீபனி குருகுல பிரின்சிபால் ஸ்ரீபாலாஜி முன்னிலையில் பெங்களூர் பாரதீய வித்யா பவன் ஆடிட்டோரியத்தில் புராநவா புதிர் போட்டி நடைபெற்றது. இந்த இறுதி போட்டியில் கலந்து கொள்ளும் 17பள்ளிகளை சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்க 250க்கும் மேற்பட்டவர்கள் வந்திருந்தனர். Dr. Raghunath – Professor and Dean – IIM Bangalore சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். வெற்றி பெற்ற மாணவச்செல்வங்களுக்கு, பரிசுகளும் சான்றிதழும் வழங்கப்பட்டன. பெங்களூர் காட் சத்சங்கத்தை சேர்ந்த பல அன்பர்கள் பல விதத்திலும் பங்கு கொண்டு இவ்விழாவை மிக நேர்த்தியாக ஒருங்கிணைத்திருந்தனர்.

## சனாதனப்புதிர் பகுதி 43 - விடைகள்- ஆத்ரேயன்

1. துரோணர் ; கர்ணன் (சீடர்கள்);
ஜம்பாஸுர் ; சததுந்துபி (அரக்கர்கள்).
2. நந்திவர்தன்.
3. சிபிதேசத்து அரசன் கோவாசனனின் புதல்வி தேவிகா- தர்மபுத்திரரின் மனைவி - மகனின் பெயர் யௌதேயன்
4. அகஸ்தியர் - லோபாமுத்திரை, இவர்களின் புதல்வர். அம்மாவின் கர்ப்பத்தில் 7 ஆண்டுகள் இருந்தார். இவருக்கு இத்மவாஹன் என்ற பெயரும் உண்டு.
5. அர்ஜுனனுக்கு.
6. தாருகன்.
7. கச்யபர் - ப்ராதா இவர்களின் புத்திரன். இந்திரன் மற்றும் குபேரனின் சபையில் இருக்கிறார்.
8. சூர்யன் தந்தை ; அஜ்மீட வம்சத்து சம்வரண் கணவர். இவர்களுக்கு குரு (kuru)என்ற குழந்தை பிறந்தது.
9. அச்வஜித்.
10. திரௌபதி - ஸ்ருதகீர்த்தி; உலூபி - இராவன்; சித்ராங்கதா - பப்ருவாகனன்; சுபத்ரா - அபிமன்யு.
11. திரௌபதி - சுதசோமன்; ஹிடிம்பா - கடோத்கஜன்; பலந்தரா - சர்வகன்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- *ஜனனி*

## ஸ்ரீபகவன்தாஸ் பாபா- 6

ஒருநாள் பச்சூலால் பார்த்து கொண்டு இருந்தபோதே பாபாவினுடைய வஸ்த்ரம் முழுவதும் ஈரமாகி விட்டது. இது பற்றி கேட்டபொழுது, பாபா, ராதாதேவி யமுனா ஸ்நானத்திற்கு சென்றிருந்ததாகவும், தானும் அவருடன் சென்றிருந்ததாகவும் கூறினார். டடியாஸ்தானின் இயற்கை அழகை, மின்சாரம் இன்றும் தொடவில்லை. இன்றும் இரவு நேரங்களில், சிறு சிறு விளக்குகள் மரங்களின் நடு நடுவே ஏற்றி வைக்கப்படுவதுதான் இரவு நேரத்தில் அங்கு வெளிச்சம். ஒரு நாள் ஸந்த்யா வேளையில் அங்கு பஜனை நடந்து கொண்டிருந்தது. சிறிது இருளும் சூழ ஆரம்பித்தது. விளக்குகள் இன்னும் ஏற்றப்படாததைக் கண்ட ஸுகதேவ் என்ற பக்தர் விளக்குகளை இன்னும் ஏற்றவில்லை என்று கூறினார். பாபா ஸஹஜமாக இங்கு மணிகளின் வெளிச்சம் தான் இருக்கின்றதே என்றார். ஸுகதேவ்ஜீக்கு இது சற்று வினோதமாகவே இருந்தது. அப்பொழுது அவர் டடியா ஸ்தானிலேயே தங்கியிருந்தார். இரவு தூக்கத்தின் நடுவில் அல்ப ஸங்க்யைக்காக அவர் வெளியே வந்தபொழுது, மண்பூமி முழுதும் மணிமயமாக ப்ரகாசிப்பதைக் கண்டு அவர் ஸ்தம்பித்து நின்றார்.

மறுநாள் பாபாவிடம் அவர் இதை கூறியபோது, பாபா, "ப்ருந்தாவனத்தின் ஒவ்வொரு துளியும் சின்மயமானது. திவ்யமானது. இங்குள்ள மரம், செடி கொடிகள் எல்லாமே சின்மயமானவை. இதோ இந்த மாலதி கொடியை பார்க்கிறாயல்லவா? ஒருமுறை பச்சூலால் இதன் கிளையை உடைத்துவிட்டான். அப்பொழுது அது தன் திவ்ய ஸ்வரூபத்தில் என்னிடம் வந்து, "பார்! பச்சூலால் என்னை துன்புறுத்தினான்" என்று கூறியது. அதனால்தான் என்னுடைய ஆஸ்ரமத்தின்

மரங்களை நான் யாரும் தொடக்கூட அனுமதிப்பதில்லை" என்று கூறினார்.

ஒருமுறை கோல்காட்டை சேர்ந்த அயோத்யாவின் மஹந்த் ஆன ஸ்ரீராமஸ்நேஹிதாஸ்ஜி பாபா, பகவன்தாஸ் பாபாஜியை தர்சனம் செய்ய வந்தார். அப்பொழுது அவர் பாபாவிடம், "சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் ப்ருந்தாவனம், நாம் பார்க்கும் இந்த பூமண்டலத்திலுள்ள ப்ருந்தாவனத்தை காட்டிலும் வேறுதானே பாபா? ஏனெனில், உலகில் உள்ள மற்ற இடங்களுக்கும், ப்ருந்தாவனத்திற்கும் எனக்கு ஒரு வித்தியாசமும் தெரியவில்லை" என்று கூறினார்.

பாபா, "இல்லை இல்லை ! இதுவே அந்த ப்ருந்தாவனம். ப்ராக்ருதமான கண்களுடன் பார்த்தால் மட்டுமே, இது பூலோகத்தில் உள்ள மற்ற இடங்களை போல் தெரியும்" என்றார். அப்பொழுது ராமஸ்நேஹிதாஸ்ஜி மற்றும் அவரருகில் அமர்ந்திருந்த பச்சூலால்ஜி இருவருக்கும் திவ்ய ப்ருந்தாவனத்தின் ஒரு திவ்ய காட்சி கிடைத்தது. அதில் மயங்கிய ராமஸ்நேஹிதாஸ்ஜி பாபாவிடம், "பாபா, எனக்கு திவ்ய ப்ருந்தாவனம் கிடைக்குமோ?" என்றார்.

"இல்லையப்பா! தாமத்தை ஒரு ஸம்பந்தானுகா பக்தியினாலேயே அடையமுடியும். குரு பரம்பரையினால் உனக்கு திவ்ய அயோத்தியின் ஸம்பந்தமுள்ளது. அதனால் உனக்கு திவ்ய அயோத்தியின் ப்ராப்திதான் ஏற்படும், திவ்ய ப்ருந்தாவனத்தினுடையதல்ல" என்று கூறினார் பாபா. 1987 ஆம் ஆண்டு சுக்ல பஞ்சமியன்று அவர் நிகுஞ்சத்தை அடைந்தார். இரண்டு மாதம் முன்பாக, அவர் ஆஹாரத்தை நிறுத்திவிட்டார். ஸ்வாமி ஹரிதாஸ் அவர்களின் கமண்டலு ஜலத்தை மட்டுமே அருந்தினார். உடம்பை விடும் ஒரு நாள் முன்பு, அவர் ஸ்ரீஅமோலக்ராம் மற்றும் ஸ்ரீஜகன்னாத் ப்ரஸாத் போன்றவர்களிடம், "பாருங்கள்! நான் நாளை காலை 4 மணிக்கு வீட்டிற்கு சென்று விடுவேன்" என்றார். மறுநாள் காலை நான்கு மணிக்கு ரங்கஜீ மந்திரின் மணி ஒலித்தபோது, பாபா தனது தாமத்திற்கு கிளம்பிவிட்டார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா – 111*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



இதுகாறும் எம்பெருமானைப் பலவாறாக வாழ்த்தியவர்கள், அப்பெருமானது திருவடிகளைக் கையால் தொழுதார்கள். "அன்னை" அத்தன்மையை உடையாய்! என விளி - "இனி தாய் என்று நினைத்து உன்னைத் தொழுதனெம்" என்றும் பொருள்படும்படி அன்னை என்று அமைத்த சொல்லழகு இன்புறத்தக்கது. இறைவன் தாயாய் உள்ளவன் அல்லவா!

*தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும் தகவும் சால்பும்*
*நீ என நின்ற நம்பி* (கம்ப. 4061)

என்ற வாலியின் கூற்றில் வரும் கம்பர் வாக்கைக் காண்க. பலமுறை திரும்பத் திரும்ப வணங்கினோம் என்பதை, அடுக்க என்றார். அடுக்குதல் - ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லுதல் செய்தலாகும். தொழுதல் வேறு, இறைஞ்சுதல் வேறு. தொழுதல் கைகுவித்து நிற்றலாகும். இறைஞ்சுதல், தலை வணங்கி நிற்றல் ஆகும். மூன்றாவது அடிவீழ்தல் ஆகும். ஒரு கோல் (தண்டம்) கீழே விழுந்தால் எப்படி விழுமோ, அப்படி கீழே விழுந்து வணங்குதல். இதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பர். வாழ்த்துதல் என்பது வாயால் தோத்திரம் செய்தலாகும். தொழுதல், இறைஞ்சுதல், வாழ்த்துதல் இவையும் ஒருவகை அடுக்காகிறது. இனி இதனுள், ஒவ்வொன்றையே திரும்பத் திரும்பச் செய்தலும் அடுக்காகும். அடுக்குகள் கால நீட்டம் குறித்து வந்தன என்றார் உரையாசிரியர் பரிமேலழகர். ஒரே செயல் திரும்பத் திரும்பச் செய்யப் பெறும்பொழுது நெடுநேரம் கடக்கும் அல்லவா! அதனையே கால நீட்டம் என்றாராகும். இவ்வாறு இறைவனை வாழ்த்தவும், தொழவும், வணங்கவும் கூட தவம் வேண்டும். வாழ்த்தல் முதலாயினவும் தவம்தான்; அதற்கும், முற்செய் தவம் வேண்டும். இதையே வள்ளுவர்
*தவமும் தவம் உடையார்க் காகும்* (குறள். 262) என்றார்.

பொது அறமாகிய நல்வினைகளைப் பலகாலும் செய்து வந்த தவம், மேம்பட்டு, இறைவனை அணுகச் செய்யும். சிறப்பாகிய இறை வழிபாடு, பிறவாப் பெருநெறி நல்கும். இதையே பெரியோர்,

*அவன் அருளாலே அவன்தாள் வணங்கி* என்பர்.

இப்பொழுது வணங்குகிற போது, இறைவன் திருவருள் கிடைக்கிறது. அத்திருவருள் மேலும் உம்மை வணங்கும்படிச் செய்ய வேண்டும் என்றார்கள் அடியார்.

*கூடும் அன்பினிற் கும்பிடவே அன்றி*
*வீடும் வேண்டா விறலின் வணங்கினார்* - இறைவனை வணங்கும் பேறு பெற்றால் வேறு எதுவும் வேண்டாம் என்பர் அடியார்.

*பச்சைமாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்*
*அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்*
*இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகர் உளானே*

என்ற ஆழ்வார் திருநோக்கு இங்கு நினையத்தகும். ஐந்தாம் பாடல், மலர்ந்து, மணம் வீசி நிறைந்தது. இதுவரை திருமாலை பற்றிய ஐந்தாம் பாடல் (பரிபாடல் 13ஆம் பாடல்) பார்த்தோம். இப்பாடலையும், அதன் திரண்ட பொழிப்பினையும் இனி காண்போம்.

*மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று*
*அணிவனப்பு அமைந்த பூந்துகில், புனைமுடி ,*
*இறுவரை இழிதரும் பொன்மணி அருவியின்*
*நிறனொடு மாறும் தார், புள்ளுப்பொறி புனைகொடி,*
*விண் அளி கொண்ட வியன்மதி அணிகொளத்*
*தண் அளி கொண்ட அணங்குடை நேமிமால்!*
*பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த*
*இருவேறு மண்டிலத்து இயக்கம் போல,*
*நேமியும் வளையும் ஏந்திய கையான் -*
*கருவி மின்ன அவர் இலங்கும் பொலம்பூண்*
*அருவி உருவின் ஆரமொடு, அணிந்தநின்*
*திருவரை அகலம் - தொழுவோர்க்கு*
*உரிதுஅமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து* (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் – 8

பசவர், வேதத்தின் அங்கங்களான, இலக்கணம், ஜோதிடம், கல்பம் முதலியவற்றிலும் தேர்ச்சி பெற்றார். வேதம் சொல்லும் விஷயங்களை, பலருக்கும் பயன்படுமாறு, எடுத்து சொல்ல வேண்டும் என்று அவர் நினைப்பார். அக்காலங்களில், அவருக்கு பலவிதமான கனவுகளும் வரும். சமயத்தில் துணை இல்லாமல், தனியே நீந்துவது போன்றும், தவிப்பது போன்றும் வரும். சில சில சமயங்களில், அவர் இருக்கும் அறை உள்ளே மிக பெரிய பிரகாசமாகி விடும். கனவு கலைந்து எழுந்தாலும், அந்த பிரகாசம் அப்படியே சிறிது நேரம் இருக்கும். பெரும்பாலும் இந்த மாதிரி கனவுகள், அவருக்கு இரு விதத்தில்தான் முடியும். ஒன்று ஈசான்ய குரு தோன்றுவார். அல்லது அவருக்கு முன்னர் ஒரு மண்டபம் தோன்றும். அல்லது அந்த மண்டபத்தின் உள்ளே, தாம் அமர்ந்திருப்பது போல் தோன்றும். உபநயனம் முடித்து கூடலசங்கமத்தில் உள்ள குருவை பார்க்க சென்ற சமயம், அப்படி ஒரு மண்டபத்தை பார்த்தபொழுது மிகவும் ஆச்சரியப்பட்டார் அவர். இம்மாதிரி விஷயங்களை தனது அக்காள் நாகம்மாவிடம் மட்டும் அவர் அவ்வப்பொழுது பகிர்ந்து கொள்வதுண்டு.

ஒருமுறை பசவரின் ஆசிரியர், பகேவாடியில் ஒரு யாகம் செய்ய தீர்மானித்தார். அதில் பசவருக்கு முக்கிய பொறுப்பு தர முடிவு செய்தார். யாகம் துவங்குவதற்கு சில நாட்கள் முன், ஒருநாள் பசவரும் நண்பர்களும், வயல்வெளிகளின் நடுவே விளையாடி கொண்டு இருந்தனர். அப்பொழுது சேரியிலிருந்த குடிசைகளில் இருந்து ஒருத்தி, அலறி கொண்டு ஒடி வந்தாள். பசவரின் நண்பர்கள் அவளை பார்த்தவுடன் விலகி நின்றனர். அவளும் யாரையோ தேடுவது போல் இருந்தது. பசவர் மட்டும் அவளிடம், "என்னம்மா! யாரை தேடுகிறாய்? என்ன விஷயம்?" என்று கேட்டார். அவள் தயங்கித்தயங்கி, கண்ணீருக்கு மத்தியில், "என் கணவனுக்கு நாலு நாட்களாக உடம்பு

சரியில்லை. இப்பொழுது, அவன் நினைவு தப்பி விட்டது. வயல்வெளிகளில், என் உறவுக்காரர் வேலை செய்து கொண்டு இருக்கலாம் என்று தேடி ஓடி வந்தேன்" என்றாள். அவளுக்கு பதில் சொல்கையில் மூச்சிரைத்தது.

அவள் யாரை தேடினாளோ, அந்த நபர் அங்கு இல்லை என்றவுடன், பசவர் சற்றும் தயங்காமல், "சரி. நான் வருகிறேன். என்னவென்று பார்ப்போம்" என்றார். அவள் இரும்பெடுத்து அடித்தாற்போல் உறைந்து போனாள். அப்படியே கல்லாகி நின்றாள். "நீங்கள் எப்படி வருவீர்கள்? மேலான நீங்கள், எங்கள் குடியிருப்புக்கு வரலாமா? கூடவே கூடாது" என்றாள் அவள். காலத்தின் அவசியம் கருதி, பசவர், அவள் சொன்னதை காதில் போட்டு கொள்ளவில்லை. "உன் கணவன் நினைவு தப்பி கிடக்கிறான் என்கிறாய். இப்படி என்னிடம் எதிர் வாதம் பேசுகிறாயே. எங்கே உன் வீட்டை காட்டு" என்றவாறு அவளுக்கு முன்னால், நடக்க ஆரம்பித்தார். அவரது நண்பர்களுக்கு அதிர்ச்சி. இது எங்கே போய் விடுமோ என்று நினைத்தனர்.

பசவரின் முன்னால், அந்த பெண், ஓட்டமும் நடையுமாய் சொல்ல சொல்ல கேட்காமல் வருகிறீர்கள் என்று சப்தம் போட்டு கொண்டே, தன் வீட்டு வாசலுக்கு ஓடினாள். அந்த குடிசை வீட்டிற்குள் நுழைய, பசவர் அவளின் அனுமதியை கேட்கவே இல்லை. அவள், "கூடாது கூடாது" என்று சொல்லிக்கொண்டே இருந்தாள். பசவர் உள்ளே போய் பார்க்கையில், வீட்டில் மோசமான நெடி அடித்தது. அவள் கணவன், வயிற்று வலியால் துடித்து கொண்டு இருந்தான். வாயினால் உளறலாக பிதற்றி கொண்டு இருந்தான். ஒரு நாயும், பூனையும் மூலைக்கொன்றாக இருந்தன. அம்மனிதனின் குழந்தை சளி ஒழுகியவாறு ஒரு பழைய சாக்கில் சிணுங்கி கொண்டு இருந்தது. பசவருக்கு அதை பார்த்து நெஞ்சம் கனத்தது. அவர், அம்மனிதனின் கைகளை பிடித்தார். மார்பை தடவினார். வெளியே வந்தார். அவன் மனைவி முகத்தில் ஒரு அந்தணர் வீட்டிற்குள் நுழைந்த அதிர்ச்சி தெளிவாக இருந்தது. (தொடரும்)

"மதுரமுரளி" சந்தா
5 ஆண்டு – ரூ 600
3ஆண்டு – ரூ 360
1 ஆண்டு – ரூ 120
For Details:
**+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | அக்டோபர் 11, 25 நவம்பர் 10, 24 |
| அக் 4 | ராயப்பேட்டை சென்னை |
| அக் 15 | பாரதிதாசன் காலனி புவனேஸ்வரி அம்மன் கோவிலில் உபன்யாசம் |
| அக் 23 | பிரேமிக பவன ஸ்ரீனிவாசபெருமாள் பிரதிஷ்டா தினம் |
| நவ 13 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.